# ABSTRACT

This study on the role of principals in advancing co - curricular activities is centered on the Ratnapura Education Zone. The principal, as the school principal and manager, is required to be concerned and responsible for the continued student development of the school through governance and management. The main purpose of this study is to assess the role of the principal in the co -curricular process. The importance that principals place on co - curricular activities to achieve that objective, the role of principals in overseeing and evaluating co - curricular programs, the role of principals in the implementation of co - curricular activities, and co – curricular activities Creating status, engaging students, The study also aimed at encouraging activities. The study, which is in the from of a mixed study, was conducted by Ratnapura Education Zone Tamil Language 1C - 7. Type2 - 11, type3 - 18 with 36 principals incorporated. The Chancellor's Teaching Guide has been used to determine the role of principals in the Principal Instruction Manual Scale (PIMS). The principals were then subjected to a structured interview and data were collected. The collected quantitative data were analyzed through computer software Called EXCEL 2019 and the results were found by interpreting in a descriptive approach with one hundred percent graphs. At the end of the study, it became clear that principals had a greater consensus on the leadership role of principals in advancing co - curricular activities. However, there is little interest in creating poetic status and access to resources for co - curricular activities. It is also proposed that the principals should pay more attention to motivating the students for co – curricular activities and to focus on getting the cooperation of the recipients and well – wishers.

# ஆய்வுச் சுருக்கம்

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதில் அதிபர்களின் வகிபாகம் தொடர்பான இவ்வாய்வானது இரத்தினபுரி கல்வி வலயத்தை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. அதிபர் பாடசாலைத் தலைவர், முகாமையாளர் என்ற வகையில், பாடசாலை ஆளுகை மற்றும் முகாமை மூலம் தொடர்ச்சியான மாணவர் மேம்பாட்டிற்கு அக்கறையுடையவராகவும், வகைக்கூற வேண்டியவராகவும் இருத்தல் அவசியமாகின்றது. இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் அதிபரின் வகிபாகத்தினை மதிப்பிடுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அப்பிரதான நோக்கத்தை அடைவதற்காக இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு அதிபர்கள் வழங்குகின்ற முக்கியத்துவம், இணைப்பாடவிதான நிகழ்ச்சித் திட்டங்களை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல், இணைப்பாடவிதான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதில் அதிபர்களின் நடிபங்கு, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு ஊக்கப்படுத்தல் ஆகிய குறிக்கோள்களும் ஆய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கலப்புமுறை ஆய்வு வடிவத்தில் அமையப்பெற்ற இவ்வாய்வானது இரத்தினபுரி கல்வி வலய தமிழ்மொழி மூலமான 1C - 7, வகை 2 - 11, வகை 3 - 18 ஆகிய பாடசாலை அதிபர்கள் 36 பேர் குடித்தொகையாக இணைத்துக்கொள்ளப்பட்டனர். அதிபர் போதனாசார் கையேடு தரப்படுத்தும் அளவிடை Principal Instructional Manual Rating Scale (PIMRS) எனும் வினாக்கொத்து அதிபர்களின் வகிபாகத்தை கண்டறிய பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அதிபர்கள் கட்டமைக்குட்பட்ட நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தொகைசார் தரவுகள் யாவும் (EXCEL 2019) எனும் கணினி மென் பொருட்களினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு நூற்றுவீதம் வரைபுகள் மூலம் விவரண அணுகுமுறையில் விளக்கமளிக்கப்பட்டு முடிவுகள் கண்டறியப்பட்டன. ஆய்வின் முடிவில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதில் அதிபர்களின் தலைமைத்துவ பங்களிப்பில் அதிகமாக அதிபர்கள் உடன்பாடான செல்வாக்கினை கொண்டுள்ளமை தெளிவாகியது. இருப்பினும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு கவின்நிலையை உருவாக்குதல் மற்றும் வளங்களை பெற்றுக் கொடுத்தல் ஆகியவற்றில் அக்கறை காட்டுவது குறைவாக காணப்படுகின்றது. அத்துடன் மாணவர்களை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு தூண்டுவதில் அதிக அக்கறை செலுத்துவதிலும் பெற்றார் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பினை பெறுவதில் கூடிய கவனம் செலுத்துவதிலும் அதிபர்கள் கவனத்தினை செலுத்த வேண்டும் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டுள்ளது.